பொன்னேரியில் 12 கண்காணிப்பு கேமராக்கள், சிறு நூலகத்துடன்

பிங்க் நிற மகளிர் காவல் உதவி மையம் திறப்பு

■ பொன்னேரி

பொன்னேரியில் 12 சிசிடிவி கேமராக்கள், சிறு நூலகத்துடன் பிங்க் நிற மகளிர் காவல் உதவி மையம் நேற்று முன் தினம் திறக்கப்பட்டது.

பொன்னேரி, வேண்பாக்கம் பகுதியில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி அருகே பொன்னேரி காவல் நிலையம் சார்பில், பொதுமக்களின் பங்களிப்போடு பிங்க் நிற மகளிர் காவல் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள், பெண்கள் அச்ச உணர்வின்றி காவல் துறையை அணுக ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள இந்த காவல் உதவி மையத்தின் திறப்பு விழா நேற்று முன் தினம் நடைபெற்றது. பொன்னேரி காவல் உதவி ஆணையர் ராஜசேகரன் தலைமையிலும், பொன்னேரி காவல் ஆய்வாளர் தமிழன்பன் முன்னிலையிலும், பொன்னேரி நகராட்சி தலைவர் பரிமளம் இந்த மையத்தை திறந்து வைத்தார்.

மாணவிகள், இளம்பெண்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், போட்டித் தேர்வுக்கு தயாராக ஏதுவாகவும் சிறுநூலகத்துடன் திறக்கப்பட்டுள்ள இந்த மையத்தை சுற்றி 12 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. 24 மணி நேரமும், 3 ஷிப்டுகளில் தலா 2 காவலர்கள் இந்த மையத்தில் பணியில் இருப்பார்கள்.

சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தில்

அங்கன்வாடி மையம் திறப்பு

■ கல்பாக்கம்

திருக்கழுகுன்றம் ஒன்றியம் முள்ளிகுளத்தூர் ஊராட்சி, ஈகை, சதுங்கரப்பட்டினம் கிராமங்களில், சென்னை அணுமின் நிலையம் சார்பில் சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் தலா ரூ.25 லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம் அமைக்கப்பட்டது. இக்கட்டிடத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

இதில், சென்னை அணுமின் நிலைய இயக்குநர் சேஷய்யா பங்கேற்று புதிய கட்டிடங்களை சிறுவர்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். விழாவில், அணுமின் நிலைய அதிகாரிகள், உள்ளாட்சி நிர்வாகிகள் என பலர் கலந்துகொண்டனர்.

ஆன்லைன் மூலம் ஏமாற்றி பணம் பறித்த 4 பேர் கைது

■ மாமல்லபுரம்

திருக்கழுகுன்றத்தை அடுத்த கொத்திமங்கலம் அருகே, பொறியியல் படித்த ஒருவர் ரிப்பேர் சர்வீஸ் கம்பெனியில் டீலராக பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில், இவர் கிரிண்டர் டேட்டிங் ஆப் மூலம் சிலரைத் தொடர்பு கொண்டு, நள்ளிரவில் கொத்திமங்கலம் பகுதிக்கு வரவைத்து, தவறான செயல்களில் ஈடுபட்டதாக தெரிகிறது. அப்போது, இந்த ஆப் மூலம் அவர் தொடர்பு கொண்ட திருக்கழுகுன்றம் கன்னியப்பன் (23), மணிகண்டன் (25), பிரசாந்த் (23), பாஸ்கர் (22) ஆகியோர் மேற்கண்ட நபரின் செல்போன் மூலம் ரூ.11,500-ஐ பறித்துக்கொண்டு தப்பிச் சென்றதாக தெரிகிறது. இதையடுத்து, பாதிக்கப்படடோர் அளித்த புகாரின் பேரில் திருக்கழுகுன்றம் போலீஸார் வழக்கு பதிவு செய்து, 4 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். தப்பிச் சென்ற விஷ்வா என்பவரைத் தேடி வருகின்றனர்.

ஆவடி மாநகராட்சி

பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிக்கை

ந.க.எண்.269/2025/அ1 நாள்.11.06.2026

ஆவடி மாநகராட்சி மாமன்றம் 30.01.2026 தேதிய தீர்மானா எண்.3737ல் ஐந்து கட்டண கழிப்பிடங்களுக்கு (1.ஆவடி இரயில் நிலையம், திருமலைராஜபுரம், 2.பச்சையம்மன் கோயில் தெரு, திருமுல்லைவாயல், 3.சோழம்பேடு எரியாபடி தகனமேடை அருகில், 4.தண்டுரை ஆடு அறுத்தல் தொட்டி அருகில் மற்றும் 5.கவராபாளையம் மண்டலம் 4 அலுவலகம் அருகில் உள்ளது) அங்கீகரிக்கப்பட்டதின் படியும். 19.09.2008ம் தேதிய அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் படி பிரகரிக்கப்படுகிறது. பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் உபவிதிகளின்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி கீழே விவரித்துள்ளது.

ஆவடி மாநகராட்சியில் உள்ள கீழ்கண்ட குத்தகை உரிமைக்கு 02.07.2026 தேதி வியாழன் கிழமை காலை 11.30 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். அதே உரிமங்களுக்கு அன்றே 12.00 மணிக்கு ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பகிரங்க பொது ஏலம் விடப்படும். மேலும், கீழ்கண்ட இனங்களுக்கு ஏல வைப்பு தொகையினை 01.07.2026க்குள் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக செலுத்த வேண்டும். பொறுப்புத் தொகை, கூடுதல் பொறுப்புத் தொகை ரொக்கமாகவோ, காசோலையாகவோ பெற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆணையாளர், ஆவடி மாநகராட்சி (Commissioner, Avadi City Municipal Corporation) என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கியிலோ கேப்பு வரைவோலையாக (Demand Draft) வழங்கப்பட வேண்டும். அஞ்சல் மற்றும் கூரியர் சர்வீஸ் மூலம் வரப்படும் ஒப்பந்தப்புளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பொது நிபந்தனைகள் மற்றும் குத்தகை விதிகள் அனைத்தும் பொருந்தும். இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில் சம்மந்தப்பட்ட பிரிவில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். குத்தகை காலம் பணி உத்திரவில் குறிப்பிடப்படும் நாள் வரை குத்தகை தொகையுடன் சேவை வரியும் சேர்த்து செலுத்த வேண்டும்.

ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் வைப்பு தொகையை (வங்கி வரைவோலை) ஏலம் ஆரம்பிக்கும் முன் கொடுத்து பதிவு செய்யப்பட வேண்டும். அவ்விதம் செய்தாலன்றி எவரும் ஏலம் கேட்க அனுமதிக்க இயலாது. மேலும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் வைப்பு தொகைக்கான வங்கி வரைவோலை இணைக்கப்பட வேண்டும். உயர்நீதபட்ச ஏலக்கேள்விவியில் ஒருவருட உரிமைத் தொகையை குத்தகைதாரர் முழுவதும் செலுத்திய பிறகே ஒவ்வொரு வருடமும் உரிமம் வழங்கப்படும். வைப்புத் தொகை தனியாக வைக்கப்படும். குத்தகைக்கு வருமானவரி மற்றும் சேவைவரி தனித்தனியாக செலுத்த வேண்டும். (அவ்வப்போது மத்திய ஆயத்தீர்வையைக் நிர்ணயிக்கும் சேவைவரி தொகையினை குத்தகை தொகையுடன் செலுத்த வேண்டும்) மேலும் குத்தகை பற்றிய விவரங்களை அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மேலும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை ஒத்திவைக்கவோ அல்லது தள்ளி வைக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

அட்டவணை

வ. எண்	குத்தகை இன விவரம்	01.01.2023க்கு பின்னர் தரப்பட்ட சொத்தின் மதிப்பு சான்று	சொத்து மதிப்பு சான்று உள்ளவர்கள் செலுத்த வேண்டிய வைப்புத்தொகை ரூ	சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்புத்தொகை ரூ
1	மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 5 கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமம்.	ரூ.10,00,000/-	ரூ.1,00,000/-	ரூ.2,00,000/-

வெ.ஆ.எண்.58/செ.ம.தொ.அ/2026, திருவள்ளூர், 12.06.2026

ஆணையர், ஆவடி மாநகராட்சி.

பொது அறிவிப்பு

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் நகரம், நெ.74, விளக்கடி கோயில் தெருவில் இயங்கிக்கொண்டிருக்கும் பாங்க் ஆஃப் பரோடா முன்பு விஜயா வங்கி, காஞ்சிபுரம் கிளையில் திரு. T.K. ஏகாம்பரநாதன் மற்றும் திருமதி S. சாந்தி ஆகிய இருவரும் சேர்ந்து விஜயா வங்கியில் (தற்போது பாங்க் ஆஃப் பரோடா) அவர்களுடைய சொத்தின் அசல் ஆவணங்களை கொடுத்து கடன் பெற்று அதற்காக மேற்படி வங்கிக்கு கடந்த 19.12.2012 மற்றும் 22.04.2015 ஆகிய தேதிகளில் இரு பதிவு செய்யப்பட்ட Memorandum of Deposit of Title Deeds (Doc.No.6520/2012) மற்றும் (Doc.No.2308/2015) எடுமுதிக் கொடுத்துள்ளார்கள். திரு. T.K. ஏகாம்பரநாதன் மற்றும் திருமதி S. சாந்தி ஆகிய இருவரும் வங்கியில் கீழ்கண்ட ஆவணங்களை ஒப்படை செய்துள்ளார்கள். அவை முறையே 1) 15.05.2006 தேதியிட்ட கிரையம் ஆவணம் (ஆவண எண்.1859/2006), 2) 12.06.2008 தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.497/IV/2008), 3) 17.06.2008 தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.3242/2008), 4) 11.04.2011 தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.1621/2011) ஆகும். மேற்படி ஆவணங்கள் தற்போது வங்கியில் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. 2020ஆம் ஆண்டு விஜயா வங்கி பாங்க் ஆஃப் பரோடாவுடன் இணைந்த பிறகு, காந்தி ரோடில் இயங்கிக்கொண்டிருந்த விஜயா வங்கி விளக்கடி கோவில் தெருவுக்கு மாற்றப்பட்டபோது மேற்படி ஆவணங்கள் தொலைந்து போயிருக்கலாம் என தெரியவருகிறது. எனவே யாரேனும் மேற்கண்ட அசல் ஆவணங்களை தங்கள் வசம் வைத்திருந்தாலோ அல்லது கண்டெடுத்தாலோ அதனை வங்கி மேலாளர், கைபேசி எண். 7039861175 அல்லது பாங்க் ஆஃப் பரோடா, நெ.74, விளக்கடி கோயில் தெரு, காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு தெரிவிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

இடம் : காஞ்சிபுரம்
தேதி : 08.06.2026

முதன்மை கிளை மேலாளர். பாங்க் ஆஃப் பரோடா.
விளக்கடி கோயில் தெரு கிளை, காஞ்சிபுரம்

டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் — கோரிக்கை அறிவிப்பு

TATA

தொடர்பு முகவரி : 11வது தளம், டவர் ஏ, பெனிஸுலா பிசினஸ் பார்க், கண்பத் ராவ் கடம் மார்க், லோவர் பெரல், மும்பை-400013. தொடர்பு எண். (022) 66069383.

பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்") விதி 3 உடன் படிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பாதுகாப்பு நலன்களை செயல்படுத்துதல் சட்டம், 2002 ("சட்டம்") பிரிவு 13(2)-ன்கீழ்

கீழே கையொப்பமிட்டுள்ள டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (TCHFL)-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பிரிவு 13(12) சட்டத்தின்கீழ் பிரிவு 13(2) சட்டத்தின் விதி 3-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே தேதியிட்ட விரிவான கோரிக்கை அறிவிப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இங்கு பட்டியலிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/ இணை கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) (அனைவரும் ஒருமையாக அல்லது ஒன்றாக "கடமையாளர்கள்")/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) ஆகியோரை அழைத்து, குறிப்பிட்ட தொகையைச் செலுத்த அந்தந்த கோரிக்கை அறிவிப்பில், கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அந்தந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த மேற்கூறிய அறிவிப்புகளின் நகல்கள் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் A.D. மூலம் வழங்கப்பட்டன, மேலும் அவை கீழே கையொப்பமிடப்பட்டவரிடம் கிடைக்கின்றன, மேலும் கூறப்பட்ட கடன்தாரர்கள்/சட்டப்பூர்வ வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) அவர்கள் விரும்பினால் சம்பந்தப்பட்டவைகளை சாதாரண அலுவலக நேரத்தில் எந்த வேலை நாளிலும் கீழே கையொப்பமிடப்பட்டவரிடமிருந்து நகல் பெசுகிக்கலாம்.

மேற்கூறியவை தொடர்பாக TCHFL-க்கு அந்தந்த அறிவிப்பு/கள் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், மேற்கூறிய கடமைப்பட்டவர்கள்/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) ஆகியோருக்கு மீண்டும் ஒருமுறை அறிவிப்பு கொடுக்கப்படுகிறது, அந்தந்த பெயர்களுக்கு எதிராக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை, மேலும் வட்டியுடன் சேர்த்து, கீழே (5) தெடு வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இருந்து மணம் செலுத்தும் தேதி வரை அல்லது கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள்/ எழுத்துகளுடன் பகுக்கவும், ஏதேனும், இருந்தால் கடமைப்பட்டவர்கள் செயல்படுத்தலாம். கடனை உரிய முறையில் திருப்பிச் செலுத்துவதற்கான பத்திரமாக, பின்வரும் பாதுகாப்பான சொத்து(கள்) TCHFL-க்கு முறையே கூறப்பட்ட கடன்தாரர்(கள்) மூலம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடமைப்பட்டவர்(கள்)/ சட்ட வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) பெயர்	கீழ்க்குறிப்பிட்ட தேதியில்* மொத்த நிலுவை தொகை (ரூ.)	கோரிக்கை அறிவிப்பு நாள் & NPA நாள்
2	TCHHL0490000100293140 & TCHIN04900001002 95819	திரு. M சீனிவாசன், (கடன்தாரர்) திருமதி. S சங்கீதா (இணை-கடன்தாரர்)	04.06.2026 தேதியில் தொகை ரூ.23,58,098/- (ரூபாய் இருபத்தி மூன்று இலட்சத்து ஐம்பத்தி எட்டாயிரத்து தொண்ணூற்றி எட்டு மட்டும்)	04-06-2026 and 03-06-2026

பாதுகாப்பு சொத்துக்கள் விவரம்/அசையா சொத்துக்கள்/அடமான சொத்துக்கள்: காலி வீட்டு சைட்டுகள் மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், மனை எண். 190 மற்றும் 191 அளவுகள் 1600 சதுர அடி அட்டவணை A யில் உள்ளது. சர்வே எண். 84/8 மற்றும் 84/10 "ஸ்ரீ சாய் கார்டன்" ஒப்புதல் வழங்கியது D.T.C.P.No.34/2022, 13.05.2022 அன்று வழங்கப்பட்டது, பனப்பாக்கம் கிராமம், வட்டம்பாக்கம் பஞ்சாயத்து, குன்றத்தூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்டது. மனை எண்.190 அளவுகள் 800 சதுர அடி. எல்லைகள் வடக்கில் : 24 அடி சாலை, தெற்கில் : மனை எண்.215, கிழக்கில் : மனை எண்.191, மேற்கில் : மனை எண்.189, அளவுகள் வடக்கில் : 20 அடி, தெற்கில் : 20 அடி, கிழக்கில் : 40 அடி, மேற்கில் : 40 அடி, மனை எண்.191 அளவுகள் 800 சதுர அடி. எல்லைகள் வடக்கில் : 24 அடி சாலை, தெற்கில் : மனை எண்.214, கிழக்கில் : மனை எண்.192, மேற்கில் : மனை எண்.190, அளவுகள் வடக்கில் : 20 அடி, தெற்கில் : 20 அடி, கிழக்கில் : 40 அடி, மேற்கில் : 40 அடி. மேற்கூறிய சொத்து பனப்பாக்கம் கிராமம், வட்டம்பாக்கம் பஞ்சாயத்து மற்றும் படப்பை சார்-பதிவு மாவட்டம் மற்றும் தென்-சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

3	TCHHF0404000100184754 & TCHIN04040001001 86864	திரு. ராகவா வெங்கட சத்யநாராயணன் ராஜு, (கடன்தாரர்) திருமதி. R சிரீஷா (இணை-கடன்தாரர்)	09.06.2026 தேதியில் தொகை ரூ.1,41,28,677/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தி ஒரு இலட்சத்து இருபத்தி எட்டாயிரத்து அறுநூற்றி எழுபத்தி ஏழு மட்டும்)	09-06-2026 and 03-06-2026

பாதுகாப்பு சொத்துக்கள் விவரம்/அசையா சொத்துக்கள்/அடமான சொத்துக்கள்: நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், O.S.No.133, R.S.No.3204/2, பிளாக் எண்.63, அளவுகள் 792 சதுர அடி (பட்டாவின்படி 789 சதுர அடி) மிகவும் பழைய கதவு எண்.1/1, தற்போது பழைய கதவு எண்.2, புதிய கதவு எண்.3, பட்டாவின்படி மற்றும் முன்னதாக ஆவணம் ஆதிபாட்டன் தெரு, மவுண்ட் சாலை, சென்னை 600002, வீட்டு வரி அசெஸ்மெண்ட்படி மற்றும் மின்சாரம் சர்வீஸ் கார்ட் வாலர்ஸ் சாலை 1 லேன், திருவல்லிக்கேணி கிராமம், திருவல்லிக்கேணி தாலுகா, சென்னை மாவட்டத்திற்கு உட்பட்டது மற்றும் எல்லைகள் வடக்கில் : க.எண்.1, ஆதிபாட்டன் தெரு - ஆர்.எஸ்.எண். 3204/1-க்குட்பட்ட சொத்து, தெற்கில் : லட்சுமணசுவாமி முதலியார் அவர்களின் சொத்து, ஆர்.எஸ்.எண். 3216, கிழக்கில் : வாலர்ஸ் சாலை 1 லேன், மேற்கில் : சயத் அப்துல்லா சாஹிப் அவர்களின் வீடு, ஆர்.எஸ்.எண். 3205, அளவுகள் கிழக்கிலிருந்து மேற்கு வடக்கு பக்கம் 33 அடி, கிழக்கிலிருந்து மேற்கு தெற்கு பக்கம் 33 அடி, வடக்கிலிருந்து தெற்கு கிழக்கு பக்கம்: 24 அடி, வடக்கிலிருந்து தெற்கு மேற்கு பக்கம்: 24 அடி, திருவல்லிக்கேணி சார்-பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

* மேலே குறிப்பிடப்பட்ட அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், செலவினங்கள், கட்டணம் மற்றும்/அல்லது செயல்படுத்தப்படும் தேதி வரை ஏற்படும் கட்டணங்கள் போன்றவை. மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் TCHFL க்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், TCHFL மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின்கீழ், மேற்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்)/சட்டப்பூர்வ வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) மீது செலவுகள் மற்றும் விளைவுகள் தொடரப்படும்.

மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/சட்டப்பூர்வ வாரிசுகள்/சட்டப் பிரதிநிதி(கள்) விற்பனை குத்தகை அல்லது வேறு வழியில் TCHFL முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மேற்குறிப்பிட்ட சொத்துக்களை மாற்ற சட்டத்தின்கீழ் தடை செய்யப்படுகிறது. வேறு எந்த நபர்களோ அந்தச் சட்டத்தின் விதிகளுக்கு முரணாக அல்லது அதனை தூண்டும் விதமாக செயல்பட்டால் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட விதிகளின்கீழ் சிறை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படும்.

நாள்: 13.06.2026
இடம்: சென்னை

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

FEDBANK பெட்பேங்க் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : யூனிட் எண்.1101, 11வது தளம், சிக்னஸ், மனை எண்.71A, பவாய், பாஸ்பொலி, மும்பை 400 087.

சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டவர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 (54 ஆப் 2002)ன் கீழ் பெட்பேங்க் பைனான்ஷியல் சர்வீஸஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக இருப்பதாலும், கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் (''விதிகள்'') பிரிவு 13 (12)ன் விதி 3ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 16/9/2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை கடன்தாரர், அடமானதாரர், உடன் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரருக்கு வழங்கியுள்ளார்: (1) **பிளாக் அண்ட் ஒயிட் (கடன்தாரர்)**; (2) **மூ சாகிர் (உடன் கடன்தாரர்)**; (3) **ஆஷ்மீன் எம் (உடன் கடன்தாரர்)** ஆகியோரை, கடன் கணக்கு எண். **FEDCHNLAP0508771**–ல் 16/9/2025 **தேதியன்று நிலுவையில் உள்ள தொகையான ரூ. 85,22,617/- (ரூபாய் எண்பத்து ஐந்து லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து அறுநூற்று பதினேழு மட்டும்)**–ஐ அதற்கான ஒப்பந்த வட்டி மற்றும் அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் ஆகியவற்றுடன், கோரிக்கை அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரி கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட கடன்தாரர், அடமானதாரர், உடன் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர் ஆகியோர் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் மேற்கண்ட தொகையைச் செலுத்தத் தவறியதால், கடன்தாரர், அடமானதாரர், உடன் கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தனக்கு SARFAESI சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002–ன் விதி 8–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் **நேரடி சுவாதீனத்தை ஜூன் 09, 2026** அன்று எடுத்துக்கொண்டார்.

மேலே குறிப்பிடப்பட்ட கடன்தாரர், அடமானதாரர், உடன் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் பின்வரும் சொத்து தொடர்பாக எந்தவொரு பரிவர்த்தனைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்; மேலும் பின்வரும் சொத்து தொடர்பான எந்தவொரு பரிவர்த்தனைகளும் பெட்பேங்க் பைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட்–ன் கடன் கணக்கு எண். **FEDCHNLAP0508771**–ல் 16/9/2025 **தேதியன்று உள்ளபடி ரூ. 85,22,617/- (ரூபாய் எண்பத்து ஐந்து லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து அறுநூற்று பதினேழு மட்டும்)** மற்றும் அதற்கான ஒப்பந்த வட்டி, அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் ஆகியவற்றுக்கான பொறுப்பிற்கு உட்பட்டதாக இருக்கும்.

அடமானச் சொத்துக்களை மீடபதற்கான கால அவகாசம் தொடர்பாக, கடன்தாரருக்கு இச்சட்டத்தின் பிரிவு 13–ன் துணைப் பிரிவு (8)–ன் கீழ் அழைப்பு விடுக்கப்படுகிறது.

அட்டவணை |

அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விவரம்

தமிழ்நாடு, சென்னை–600120, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா மற்றும் கிராமம், மெல்மா நகரில் அமைந்துள்ள, பட்டா எண் 1518–ன் படி கிராமநத்தம் பழைய சர்வே எண் 115 பகுதி மற்றும் 115/2 பகுதி, புதிய சர்வே எண் 1411/10–ஐக் கொண்ட, 2632 சதுர அடி நிலம் மற்றும் தரை தளத்தில் 800 சதுர அடி கட்டிடம் ஆகியவற்றைக் கொண்ட அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் அனைத்துப் பகுதிகள் மற்றும் பாகங்களும். மேற்கண்ட சொத்தின் எல்லைகள்: – கிழக்கு : – நீதிமன்ற வளாகம், மேற்கு : – மாரியம்மன் கோயில் தெரு, வடக்கு : – கோயில் மனை, தெற்கு : – திருமதி. நீலா செல்வம் என்பவருக்குச் சொந்தமான வீடு.

இடம் : சென்னை
தேதி : 09–06–2026

ஒப்பம்/- (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பெட்பேங்க் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்

Central Bank of India — सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया — சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

1911 से आपके लिए 'केंद्रित' 'CENTRAL' TO YOU SINCE 1911

எண்ணூர் கிளை
எண்.396 B, K H ரோடு, காமராஜ் நகர், எண்ணூர்
சென்னை-600057, தமிழ்நாடு Tel: 2575 0155,
E-mail: bmchen2761@centralbank.bank.in

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு அந்த சொத்து **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக https://baanknet.com என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: Mr.ரவி.S, S/o.Mr.சுந்தரம், **சக-கடன்தாரர்: Mrs.காயத்ரி.R**, இருவரது முகவரி, எண்.40/F6, அழகர் பெருமாள் கோயில் தெரு, வடபழனி, சென்னை-600 026

கோரிக்கை அறிவிப்பு தேதி: 09.04.2021 / கடன் நிலுவைத்தொகை: **23.12.2025** அன்றுள்ளபடி ₹ 39,84,555/- சட்டரீதியான கட்டணங்கள், வட்டி, செலவுகள் தவிர்த்து; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 26.02.2022**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

ஷெட்யூல் A சொத்து: சர்வே எண்கள்.370/2A1 & 370/2A2(P), புதிய பட்டா எண்.5756, பட்டா படி புதிய சர்வே எண்.435/68, மனை எண்.107, ப்ளாட் எண்.F1 (முன்பகுதி), **குட்வில் நகர் பகுதி-II, காபரம்பேடு கிராமம், செங்கல்பட்டு மாவட்டம் என்னும் முகவரியில் உள்ள குடியிருப்பு சொத்து,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.106-ல் உள்ள காலி நிலம், தெற்கு: மனை எண்.108 & Mr.M V பத்மநாபன்-க்கு சொந்தமான மனை, கிழக்கு: காலி நிலம், மேற்கு: 30 அடி அகல ரோடு.

ஷெட்யூல் B சொத்து: ப்ளாட் எண்.F-1, முதல் தளம் இதில் 981 சதுர அடி ப்ளாட் (பொது இடம் உட்பட), அதனுடன் ஒரு மூடிய கார் பார்க்கிங், ஷெட்யூல் A சொத்தில் 396 சதுரு அடி (36.80 சதுர மீட்டர்) பிரிக்கப்படாத பங்கு நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 16,00,000/-	டேவணித்தொகை	₹ 1,60,000/-
ஏல உயர்வு தொகை	₹ 20,000/-	சுவாதீனம் வகை: நேரடியான (Physical)	
இ-ஏல தேதி/நேரம்	29.06.2026	காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை	

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 29.06.2026 மாலை 3.00 மணிக்குள்

சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 22.06.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: https://baanknet.com **(அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.